

கலை இலக்கியத் திங்களிதழ்

# கணையாழி

மலர் : 59 இதழ் : 04 ஜூலை 2024 விலை ரூ.25/-

## எப்போது கண் விழிக்கும் இந்திய ஜனநாயகம்? – ம.ரா.

# உள்ளடக்கம்

## கட்டுரை


| | |
|---|---|
| மு. இராமசாமி | 06 |
| கவிதைக்காரன் இளங்கோ | 34 |
| ஸ்ரீவில்லிபுத்தூர் எஸ். ரமேஷ் | 59 |
| அரிமளம் பத்மநாபன் | 47 |


## சிறுகதை


| | |
|---|---|
| அ.நாகராசன் | 18 |
| வெ.மஹாதேவன் | 43 |
| வாசுதேவன் அருணாசலம் | 52 |


## கவிதை


| | |
|---|---|
| மகிழை.சிவகார்த்தி | 17 |
| ஈசு | 42 |
| சன்மது | 42 |
| செ.புனிதஜோதி | 51 |
| செ.பாலா கரடி(எ)காந்திநகர் | 57 |
| வ.ஐ.ச.ஜெயபாலன் | 67 |


## நினைக்கப்படும்


| | |
|---|---|
| மரன் | 30 |


## கடைசிப் பக்கம்


| | |
|---|---|
| இந்திரா பார்த்தசாரதி | 68 |



சிறுகதை

வாசுதேவன் அருணாசலம்

# மாமா! அப்பா எங்க?

கோடு கிழிச்சாச்சுன்னா... அவ்வளவுதான். செய்யறது செஞ்சுக்குங்க! அப்புறம் அத மறந்துட்டோம்! இத மறந்துட்டோம்னு இழுத்துக்கிட்டிருக்கக்கூடாது! சரியா வராது! சொல்லுறத சொல்லிட்டோம். சரியானா நேரத்தில எல்லாத்தையும் செஞ்சிடணும். அப்புறம் குத்தம் கொறை சொல்லக்கூடாது!" என்று உரக்கக் கத்தினார் சந்தானம். வயது எழுபத்து நான்கு! இடது கையில் அவருடைய உயரத்தை விட இரண்டடி நீளமான தடி. உச்சந்தலை பொட்டல். மேல் உதடு அவருடைய மீசைக்குள் ஒளிந்து கிடந்தது. சவரம் செய்து சரியாக ஒரு வாரம் முடிந்திருந்தது. முழங்கால் தெரியுமளவிற்கு மடித்துக்கட்டிய வெள்ளை வேஷ்டி. இரண்டு மாதத்திற்கு முன் துவைத்தது. கடம்பர் கோயில் முன்னால் இருக்கும் பிரதான சாலையைத் தாண்டி காவேரியின் தெற்கு கரையில் அடர்ந்த மரங்களுடன் பரந்து கிடக்கும் மணலில் எந்தச் சலனமுமின்றி வந்ததையெல்லாம் மௌனமாக விழுங்கிக்கொண்டிருக்கும் மயானம்தான் சந்தானத்தின் கதி! கடம்பர் துறை மயானத்தில் ஓர் அடக்கம் என்றால் சந்தானம் அங்கிருப்பார். பல சாவுகளைக் கண்டவர். இறப்புச் சடங்குகளை எந்திரத்தனமாக சொல்லுபவர். என்னென்ன அடுத்தடுத்து செய்வது என்றெல்லாம் யாரும் யோசிக்க வேண்டாம்.இவர் இருந்தாலே எல்லாம் அதனதன் போக்கில் சரியாக நடக்கும். சடங்குத்தனமாக எல்லாவற்றையும் செய்வதலோ என்னவோ மரத்துப்போன உணர்வுகளுக்குச் சொந்தக்காரர்.

"இல்லீங்க! எல்லாரும் வந்துட்டாங்க! நீங்க செய்ய வேண்டியத, செய்ய ஆரம்பிச்சிடுங்க!" கூட்டத்திலிருந்து சந்தானத்திற்குப் பதில் கிடைத்தது.

"ஏம்பா... அப்படியே அச்சு கொலையாம பாடைக்கு மாத்து! கசகசனு ஆக்கிறக் கூடாது. சாமி செல மாதிரி கச்சுன்னு இருக்கணும். என்ன புரிஞ்சதா!" என்றார் சந்தானம்.

வாகனத்தின் ஸ்ட்ரெட்சரிலிருந்து தரையோடு தரையாக இருந்த மூங்கில் பாடை மீது இறந்தவரை இறக்கி வைத்தனர். பாடையின்முன் கோடும் கிழித்தாயிற்று. "வாங்க! அங்காளி பங்காளிக வந்து மரியாத செஞ்சிடுங்க!" மீண்டும் உரக்கக் கத்தினார் சந்தானம்.

“ஏம்பா! ஏன் இப்படி பண்ணுற!” என்று சந்தானத்தின் காதைக் கடித்தான் அருகில் நின்று கொண்டிருந்த சங்கிலி.

“என்னத்த பண்ணுறாங்க?” பதிலுக்கு இழுத்தார் சந்தானம்.

“அங்காளி பங்காளியோட நிறுத்திடாத! பொளப்பு நாறிடும்! புரியுதா?” என்று மீண்டும் காதைக் கடித்தான் சங்கிலி.

“அவசரப்படாத! எல்லாத்தையும் நான் பார்த்துக்கிறேன்.” மெல்லிய குரலில் சங்கிலிக்குப் பதிலளித்தார் சந்தானம்.

மீண்டும் உரத்த குரலில் “அங்காளி பங்காளிக வாங்க!” என்றார் சந்தானம். தரையில் கிழித்த கோட்டிற்குள்ளாக பாடைக்கு கால்மாட்டில் வைக்கப்பட்ட அகன்ற தேங்காய் மட்டையில் பத்து ரூபாய் நோட்டுகளும் இருபது ரூபாய் நோட்டுகளும் வந்து விழுந்தன. இரண்டே இரண்டு ஐம்பது ரூபாய் நோட்டுகள். சங்கிலியின் கண்களில் தெரிந்த “போதாது! போதாது!” என்ற வார்த்தைகளை உணர்ந்தவராய் சந்தானம் மீண்டும் உரத்த குரலில் “மாமேன் மச்சான்... கொடுத்தவங்க எடுத்தவங்க எல்லாம் வாங்க!” என்றார். சங்கிலியின் கண்களில் “திருப்தி ஒளி” தெரிந்தது. சங்கிலி இரண்டாவதாக ஒரு தேங்காய் மட்டையை ஏற்கனவே நோட்டுகளால் நிறைந்துவழிந்த தேங்காய் மட்டையின் அருகில் வைத்தான். மேலும் சில நோட்டுகள் வந்து விழுந்தன. சங்கிலி மீண்டும் சந்தானத்தைப் பார்த்தான். “வேற உறவுக... கூட்டாளிக... அறிஞ்சவுங்க... தெரிஞ்சவுங்க... எல்லாரும் வாங்க... வந்து மரியாதை செஞ்சிருங்க...” என்றார் சந்தானம். சிறிது நேரத்தில் இரண்டாவது தேங்காய் மட்டையும் நோட்டுகளால் நிறைந்து வழிந்தது.

“கொள்ளி போடுறவங்க வாங்க!” என்று கூட்டத்தை நோக்கி அழைத்தார் சந்தானம்.

“அஞ்சு வயசுதான் ஆகுது. அந்தப் பையன தொந்தரவு செய்யாதீங்க! பயந்து கியந்து போயிட்டானா... ஜன்னி கின்னி வந்துட்டா வம்பாப் போகும்” என்றார் இறந்து போனவரின் மாமனார். “அப்ப சும்மா கொள்ளிச் சட்டியத் தொட்டு கொடுக்கச் சொல்லுங்க! போதும். உங்கள்ல நெருக்கமான சொந்தக்காரங்க யாராவது எடுத்துக்கிங்க! மத்த சடங்கையெல்லாம் அவரே செஞ்சிடுவாரு!” என்ற சந்தானத்தின் வார்த்தைகளை அங்கிருந்த அனைவரும் ஏற்றுக்கொண்டனர்.

வெட்டவெளி மணல் பரப்பிலிருந்து ஒத்தயைடிப்பாதை வழியாக எரியூட்டும் இடத்திற்கு பாடையுடனும் கொள்ளிச்சட்டியுடனும். வந்துசேர்ந்தனர். “சங்கிலி கட்டை, மட்டை.... சரியா, அளவா அடுக்கிட்டேல்ல! சாந்து கொழச்சிட்டியா? எத்தன சட்டி கொழச்சிருக்க?” என்றார் சந்தானம். “அங்கு! ஏண்டி ... எத்தன கொழச்சிருக்க?” என்று தாழ்வானத் தகரக் கூரையோடு இருக்கும் அந்த எரியூட்டும் இடத்திற்கு தெற்காக ஒரு சிறிய பள்ளத்தில் கெண்டைக்கால் சேற்று ஆழத்தில் நின்றுகொண்டிருந்த தன்னுடைய துணைவி அங்கம்மாளிடம் கேட்டான் சங்கிலி. “ஒரு அஞ்சாறு தேறும்!” என்றாள் அங்கம்மாள். “போதும்! போதும்! சங்கிலி! சட்டுபுட்டுன்னு பெட்டுக்கு மாத்தி விறட்டியையும் மட்டையையும் அடுக்கு!.. இந்தாபாரு! திரும்பவும் கேட்கறேன்! ‘கட்டைகள சரியா அடுக்கியிருக்கியா? போன தடவ மாதிரி ஏதாவது நடந்திடக் கூடாது! என்ன புரியுதா?” என்றார் சந்தானம். “போன தடவ சைஸ சரியா சொல்லியிருந்தா, சரியா பண்ணியிருப்போம். அந்த மாதிரி தப்பெல்லாம் எதுவும் இப்ப நடக்காது. நீங்க கவலப்படாதீங்க! பொணத்த பாத்துட்டு வந்துதான் தம்பி எல்லாம் செஞ்சியிருக்கான்!” என்று அங்கம்மாளுக்கு பக்கத்தில் நின்றுகொண்டிருந்த தன்னுடைய மகன் முருகனைக் காட்டினான் சங்கிலி. “ஒழுங்கா... சரியா...

பண்ணிருக்கியா? இல்ல! உங்கப்பேன் மாதிரி சொதப்புவியா?" என்ற சந்தானத்தின் கேள்விக்கு பதில் பேசாமல் தலையை மட்டும் 'எல்லாம் சரியா செஞ்சாச்சு' என்பதுபோல தலையை ஆட்டினான் முருகன். "சரி! மடமடன்னு பெட்டுக்கு மாத்தி... செய்ய வேண்டியத சீக்கிரம் செஞ்சுவிடு!" என்று அதட்டினார் சந்தானம். கட்டைகளுக்கு மேல் வறட்டிகளும் அதற்கு மேல் தேங்காய் மட்டைகளும் சரிந்துவிடாமல் அடுக்கப்பட்டு சமதளமாக இருந்தது. எரியூட்டும் திறந்தவெளி அறைக்கு வெளியில் வைக்கப்பட்டிருந்த பாடையிலிருந்த வரை உறவுக்காரர்களும் நண்பர்களும் உள்ளே எடுத்துவர முயன்றபோது, "மாலயெல்லாம் எடுத்திடுங்க. தொளசி மால மட்டும் போதும்!" என்று கத்தினான் சங்கிலி. "முட்டாப்பயலே! தொளசி மால பொம்பளைக்கு தான்டா!... எதுவும் வேண்டாம். அதையும் எடுத்திடுங்க! என்று சற்று கோபத்துடனேயே கத்தினார் சந்தானம். "ஆமாங்க! வெறும் பொணத்தை அப்படியே அலுங்காம குலுங்காம இங்க கொண்டுவந்திடுங்க!" என்றான் சங்கிலி.

"ஏம்மா! அங்கம்மா! ஒன் புருசனுக்கு அறிவுங்கிறதே கிடையாதா! டேய்! சங்கிலி! நல்லா மொத்து வாங்கப்போறடியோவ்!" என்று சிறிய முறுவலுடன் அங்கம்மாளின் காதுகளுக்கு எட்டும் அளவில் முணுமுணுத்தார் சந்தானம்.

"என்னங்க! நீங்க! என்னத்த அறிவில்லாம செஞ்சிபோட்டோம்?" என்று கடித்தான் சங்கிலி.

மெல்ல அவனை, தன்னருகில் அழைத்தார் சந்தானம். "பொணம்னு சொல்லாதேன்னு எத்தன தடவ சொல்லியிருக்கேன்! டேய்... நமக்குத்தான்டா அது பொணம். அவுங்களுக்கெல்லாம் அது உறவு. வருத்தப்படுவாங்கல்ல!" என்று சங்கிலிக்கு மட்டும் கேட்கும் அளவில் முனகினார் சந்தானம்.

"ஏங்க! பொணத்த பொணம்னுதான சொல்லணும்" என்ற சங்கிலியின் பதிலிலிருந்த நக்கலை சந்தானம் உணராமலில்லை.

"ஒன்னைய பொணமாக்கப் போறானுங்க! ஜாக்கிரத!... அது இதுன்னாவது சொல்லு, போதும். புரிஞ்சுக்குவாங்க! பொணேம் கிணேம்னு சொல்லி பொணமாயிராத! சொல்லிட்டேன். பூராப் பயலுகளும் தண்ணீல இருக்கானுங்க... பாத்துக்கோ!" என்று எச்சரித்தார்.

சந்தானம் சொன்ன விசயங்கள் அனைத்தையும் புரிந்துகொண்டது போல் தலையாட்டிவிட்டு அங்கிருந்து நகர்ந்து சாந்து குழைக்கும் இடத்திற்கு சென்றான் சங்கிலி. அங்கம்மாள் இரண்டு மண்சட்டியில் சாந்தை நிரப்பி வைத்திருந்தாள். "சட்டுபுட்டுன்னு முடிச்சு விடு. போட்டு இழுத்துக்கிட்டு இருக்காத. வீட்டுக்குப் போயி கஞ்சி காச்சணும். கிடைக்கிற துட்ட ஒழுங்கா வீட்டுக்கு கொண்டுவந்து சேரு! குடிச்சுப்புட்டு ஆடிகிட்டு திரியாத! என்னா? சொன்னது காதுல விழுந்துச்சா?" என்றாள் அங்கம்மாள்.

"சரி! சரி! எடுத்துக் கொடுத்துவிடு! சீக்கிரம் முடிச்சிட்டு போவோம்" என்று அங்கம்மாள் சொன்னதைக் காதில் வாங்காதவன் போல் அங்கிருந்து நகர்ந்து மயான மேடைக்குச் சென்றான்.

"ஏங்க... அத எடுத்து இங்க வைங்க... சடங்க செஞ்சி முடிக்கணும்ங்க..." என்ற சங்கிலியின் குரல் அங்கிருந்தவர்களை உலுக்கியது போல் சட்டென்று ஆறு பேர் பாடையிலிருந்தவரை விறகுகளும் வறட்டிகளும் தேங்காய் மட்டைகளும் அடுக்கி வைக்கப்பட்டிருந்த மயான மேடைக்கு மாற்றினர்.

அங்கொன்றும் இங்கொன்றுமாய்

தேங்காய் மட்டைகளை இறந்தவரைச் சுற்றி அடுக்கி சரிசெய்தான் சங்கிலி. “வாக்கரிசி சட்டி எங்க?” என்றான் அங்கு நின்றுகொண்டிருந்த முருகனிடம். முருகன் பதில் எதுவும் கூறாமல் அங்கிருந்த தூணுக்கு பின்புறமிருந்த ஒரு மண்சட்டியை எடுத்து சங்கிலியிடம் நீட்டினான். மண்சட்டியை வாங்கிக்கொண்டே “வாக்கரிசி போடுறவங்கெல்லாம் வாங்க சாமியோ! வாக்கரிசி போடுறவங்கெல்லாம் வாங்க சாமியோ!” என்று உரத்த குரலில் அங்கிருந்தவர் அனைவரையும் அழைத்தான் சங்கிலி.

“முதல குழியப் போடுடா! என்னாடா நீ பண்ணுற” என்று சங்கிலியை அதட்டினார் சந்தானம்.

“செத்த பொறுங்க! போடுவோம்ல!” என்றபடியே இறந்தவரின் மார்புப் பகுதியில் ஒரு வெள்ளைத் துணியை விரித்து அதனை அழுத்தி ஒரு சிறிய அகன்ற பள்ளம் போன்ற ஒன்றை ஏற்படுத்தினான். மேடைக்கு அருகில் மற்றொரு மண்சட்டியில் தண்ணீரை நிரப்பி வைத்திருந்தான்.

“வாங்க சாமியோ! வாக்கரிசி போடுறவங்கெல்லாம் வாங்க சாமியோ!” என்று மீண்டும் அழைத்தான். கையில் ஒரு மண் சட்டியில் மஞ்சள் பொடி கலந்த அரிசியை தாங்கிக்கொண்டு அங்கேயே சங்கலி நின்றான். இறந்தவரின் மார்புக்கு அருகிலேயே பெரிய அகன்ற தேங்காய் மட்டையையும் வைத்திருந்தான். இரண்டு மூன்று முறை பத்து ரூபாய், இருபது ரூபாய், ஐம்பது ரூபாய் நோட்டுகளால் நிறைந்து வழிய அனைத்தையும் எடுத்துக்கொண்டான். இறுதியாக மீண்டும் ஒரு முறை அழைப்பு விடுத்தான் “வாக்கரிசி போடாதவங்க வந்து போடுங்க! மூடியாச்சுன்னா அவ்வளவுதான்...”

“யேய்! பையன் இருக்கான்! அவனக் கூப்பிடுங்க”என்று கூட்டத்திலிருந்து வந்த குரல் நோக்கி சந்தானம் திரும்பினார்.

“ஏங்க சின்னப் பையன போயி இங்க கூப்பிட்டுக்கிட்டு! அதெல்லாம் தொட்டு வாங்கியாச்சு! அதுபோதும்... ஏம்பா... சங்கிலி... எல்லாம் எடுத்துட்டு மூடி முடிச்சு விடப்பா” என்றார் சந்தானம்.

“ஏங்க! அதெப்படிங்க! பையன் இருக்கும்போது... வேறெவனாவது கொள்ளி போடுவானா? பையனக் கூப்பிடுங்க!” என்ற இறந்தவரின் அண்ணன் உரக்கக் கூறிய வார்த்தைகளைப் புறந்தள்ளிவிட முடியாது என்பதை உணர்ந்த சந்தானம் சில வினாடிகள் யோசனைக்குப்பின் “சரிங்க அப்படியே செஞ்சிடலாம்... சங்கிலி முகத்த மூடி, சாந்து போட்டு இழுத்துவிட்டு கொள்ளிக் குழிய மட்டும் போட்டு எல்லாத்தையும் மூடி! சீக்கிரம்! ஏம்பா... யாராவது பையன கூப்பிட்டுக்கிட்டு வாங்க!” என்று பிரச்சனைக்குச் சட்டென்று தீர்வு கண்டவர் போல சந்தானம் பேசினார். சந்தானம் கூறியது போல் அடுத்த இருபது நிமிடத்தில் அனைத்தையும் சங்கிலி செய்து மூடிவிட்டான். அங்கம்மாளிடமிருந்து சாந்து சட்டிகளை எடுத்துவந்து சங்கிலியிடம் முருகன் கொடுக்கக் கொடுக்கச் சாந்து பூசியும், சிறிய கருப்புநிற மண்குடத்தில் தண்ணீரை நிறைத்தும், கொள்ளிக்குழியில் வைக்கோலை அடைத்தும், கொள்ளிச்சட்டியின் நெருப்பு அணைந்துவிடாமலும், அனைத்தையும் தயார் நிலையில் சங்கிலி வைத்திருந்தான். பையனை அவனுடைய மாமா தூக்கிக்கொண்டு அங்கு வந்தார். “மாமா! ஆத்துக்கு குளிக்க போவோம்ன்னுதான சொன்ன... இப்ப இங்க கூட்டிக்கிட்டு வந்திருக்க! வா... மாமா! குளிக்க போவோம். நான் தவ்வித்தவ்விதான் குளிப்பேன். வா... போவோம்!” என்ற வார்த்தைகள் மழலை வாடையோடு அங்கிருந்த அனைவருடைய காதுகளிலும் விழுந்தது. இதைக் கேட்டுக்கொண்டிருந்த

சந்தானம் மெல்ல அந்தப் பையன் அருகில் வந்தார்...

"தம்பி ராசா... நானும் குளிக்க வர்றேன்... என்னையும் கூட்டிக்கிட்டு போறீயா?" என்று பேச்சுக் கொடுத்தார்.

"ம்ம்ம்.... வாங்க... போவோம்... தவ்வித்தவ்விதான் குளிக்கணும்! சரியா?" என்ற அந்தப் பையனின் கேள்விக்கு "ஆமா! தவ்வித்தவ்விதான் நானும் குளிப்பேன்... அதுக்கு முன்னாடி சாமி கும்பிட்டுட்டுப் போயிடுவோமா?" என்று சந்தானம் கேட்டார்.

"ம்ம்... சரி... சரி... சாமி கும்பிட்டுட்டுப் போயிடுவோம்...." என்று பையன் பதில் சொன்னவுடன் பையனையும் அவனைத் தூக்கி வைத்திருந்த அவனுடைய மாமாவையும் கூட்டத்தை விலக்கிக்கொண்டு கொள்ளிபோடும் இடத்திற்குச் சந்தானம் அழைத்துச் சென்றார். "முதல்ல வாக்கரிசி போடச் சொல்லுங்க..." அதே பிடிவாதக்குரல் இறந்தவரின் அண்ணனிடமிருந்து... "சங்கிலி, வாக்கரிசிய கொண்டு வா. கொடுத்துப் போடச்சொல்லு!" என்றார் சந்தானம். சங்கிலி கொண்டுவந்தான். பையனுடைய கையில் கொடுத்தான். அடுத்த வினாடி தன்னுடைய வாயில் அந்தப் பையன் போட்டுக்கொண்டான். "த்தூ... கசக்குது.... மாமா... கசக்குது...." என்று முகத்தைச் சுளித்தான்.

"முட்டாப்பயலே... பிள்ள கையில் நறுக்குன்னு கொடுப்பியா? சொல்லி கொடுக்கிறதில்லையா" என்று சங்கிலியைக் கடிந்தார் சந்தானம். "இன்னும் கொஞ்சம் கொடு" சங்கிலியை சந்தானம் அதட்டினார்.

"இத வாய்ல போடக்கூடாது சாமி! அங்க போடணும்" என்று மயான மேடையின் தலைப்பகுதியைக் காட்டினார். பையனை அவனுடைய மாமா அங்கு அழைத்துச் சென்றார். பையன் தன்னுடைய கையிலிருந்த அரிசியை தன்னுடைய மாமா கை நீட்டிக்காட்டிய இடத்தில் போட்டான்.

"சங்கிலி! தண்ணிக் கொடத்தக் குடுத்து மூனு சுத்து சுத்தவிடு" என்று சந்தானம் கூறிக்கொண்டே பையனிடம் "சாமி கும்பிட்டுக்குங்க!" என்று வார்த்தைகளை இழுத்துச் சொன்னார். சங்கிலியிடமிருந்து தண்ணீர் குடத்தை பையனுடைய மாமா வாங்கித் தன்னுடைய வலது தோளில் வைத்துக்கொண்டு இடது கையில் பையனைத் தூக்கி அணைத்தவாறே மயான மேடையைச் சுற்றிவந்தார். கூப்பிய கையை பையன் பிரிக்கவில்லை.

"மாமா! சாமி எங்க?" என்றான் பையன்.

"இதுதானப்பா சாமி" என்று சந்தானம் சாந்தால் முழுவதுமாக மெழுகி வைக்கப்பட்ட இறந்தவரின் உடல் அடங்கிய மயான மேடையைக் காட்டினார்.

"மாமா.. இது சாமியா?" என்று பையனுடைய நக்கலான கேள்விக்கு "ஆமான்டி தங்கம்... இது சாமிதான்டி!" என்று தன் மாமா கூறியவுடன் அந்தப் பையன் கைளை கூப்பிக்கொண்டான்.

கையிலிருந்த சிறிய கொத்துக் கம்பியின் கூர்முனையால் மண்பானையில் ஓர் ஓட்டையை சங்கிலி போட்டான். பானையிலிருந்து நீர் தெறித்து வழிந்தது. முதல் சுற்று முடிந்தது. மீண்டும் அரிவாளால் இரண்டாவது கொத்து. இரண்டாவது சுற்று முடிந்தது. மூன்றாவது கொத்து. மூன்றாவது சுற்றும் முடிந்தது. மண்பானையைத் தோளிலிருந்து பின்புறமாகத் தள்ளி உடைத்தார் பையனின் மாமா. மூன்று மூங்கில் குச்சிகளை முக்கோணமாக வைத்து கட்டப்பட்டு கயிறு பிணையப்பட்டு தூரியாகக் கொண்டுவரப்பட்ட கொள்ளிச் சட்டியிலிருந்து அனலையும் கங்கையும் சிறிய அளவில் புகையையும் தள்ளிக்கொண்டிருந்த இரண்டு மூங்கில் குச்சிகளை எடுத்துப் பையனிடம் சங்கிலி

நீட்டினான். கைகளை இழுத்துக்கொண்டு பையன் மூங்கில் குச்சிகளை வாங்க மறுத்தான்.

“ஒண்ணுமில்ல சாமி! பெரிய பத்தி! அத வாங்கி இங்க சொருகி விட்டுடுங்க! அம்புட்டுத்தான். தவ்வித்தவ்விக் குளிக்க ஆத்துக்கு ஓஓஓஓஓடி போயிடுவோம்!” என்று கொள்ளிக்குழியைக் காட்டினார் சந்தானம். மெதுவாக மூங்கில் குச்சிகளை கையில் பையன் வாங்கினான். அவனுடைய மாமா கொள்ளிக்குழிக்கு அருகே தூக்கிச்சென்று பையனுக்குக் கொள்ளிக்குழி எட்டுமளவிற்கு கையைச் சற்று தாழ்த்தி இறக்கினார். பையன் வைக்கோல் அடைக்கப்பட்டிருந்த கொள்ளிக்குழிக்குள் கங்குகளின் அனலையும் சிறிய அளவில் புகையையும் கக்கிக்கொண்டிருந்த மூங்கில் குச்சிகளை செருகினான். மெல்லத் தீப்பிடிக்க ஆரம்பித்தது.

“மாமா! அப்பா எங்க?” பையன் அவனுடைய மாமாவிடம் கேட்டான். சில வினாடிகள் மயான அமைதி நிலை கொண்டது. கூட்டத்தில் ஆங்காங்கே அழுகைகள் வெடித்துக் கிளம்பின. கேவல்களும் தேம்பல்களும் இழுத்துக்கொண்டிருந்தன.

பையனின் மாமாவிடம் “குளிக்கக் கூட்டிட்டுப் போங்க” என்றார் சந்தானம். தேம்பல் ஒலிகள் விட்டுவிட்டுக் கேட்க, அனைவரும் அங்கிருந்து மெல்ல மெல்ல நகர்ந்தனர். சங்கிலியும் சந்தானமும் அங்கேயே இருந்தனர். சந்தானத்தின் கண்களிலிருந்து வழிந்துகொண்டிருந்த கண்ணீரைப் பார்த்து சங்கிலி அதிர்ந்துபோனான். சந்தானம் அழுது சங்கிலி பார்த்ததேயில்லை. தோளிலிருந்த துண்டை எடுத்து வாயைப் பொத்திக்கொண்டு தேம்பித்தேம்பி அழுதார் சந்தானம். “இதே வயசுலதான் எங்கப்பேன் என்ன அம்போன்னு விட்டுட்டுப் போயிட்டான்... நாய் படாத பாடு. பொல்லாத உலகம்டா, சங்கிலி... பொல்லாத உலகம்... அப்பேன் இல்லாட்டின்னா அவ்வளவுதான்டா... ஏறி மேஞ்சிடுவானுக! இந்தப் பையன் அப்பா இல்லாம வளரப் போறானே! என்னென்ன பாடுபடக் காத்திருக்கானோ!” என்று புலம்பினார் சந்தானம்.

தூரத்தில் திருவீங்கோய் மலைக்கோயில் கோபுர விளக்கு மங்கலாய் மினுங்க அதைநோக்கி மேற்கே குளித்தலையையும் முசிறியையும் இணைக்கும் நீண்ட “பெரியார்” பாலத்தில் கனரக வாகனங்கள் மெல்ல ஊர்ந்து சென்றுகொண்டிருந்தன தங்கள் பயணங்கள் முடியாமலா போய்விடும் என்ற ஆர்வமில்லாத நம்பிக்கையோடு...

vasuaruntamil@gmail.com ■